# தமிழ் கல்விநிலையம் – மவுண்றூயிட்

## Tamil Study Centre - Mount Druitt

*Mobile: 0449 892 066*

*Email :mtdruitttsc@gmail.com* *Web : www.mtsc.org.au*


# ஆண்டு 7 – பேச்சுப் போட்டி 2019

பேச்சுப் போட்டி எதிர்வரும் **01.06.2019** அன்று மாலை 1 மணி முதல் பாடசாலை மண்டபத்தில் ஆரம்பமாகி நடைபெறும்.









இறைபாதம் தொழுது ,

அன்னை தமிழின் ஆசிவேண்டி,

ஆசிரியப்பெரியோரை போற்றி,

நடுவர் பெருமக்களை பணிந்து,

அரங்கினுள் இருக்கும் அனைவருக்கும் அன்பான வணக்கம்.

இன்றைய நன்னாளில் எனது உரை ஏற்றிட்ட மகுடம்

# தொடர்பாடல் ஊடகங்கள்

கடந்துபோன செய்திகள், சமகால நிகழ்வுகள், புதிய புனைவுகள், அனைத்தையும் விறுவிறுப்பாய் எடுத்துரைக்கும் சாதனங்கள் தொடர்பாடல் ஊடகங்கள். அரசியல், புவியியல், பொருளாதாரம், இராணுவம், கல்வி, விளையாட்டு, சுகாதாரம் என பல்தரச் செய்திகளையும் சிறப்பாய் சொல்லித் தருபவை. புனைகதைகள், புதுக்கதைகள், உண்மைக்கதைகள், உயிர்வாழ் அங்கிகளின் கதைகள், கோள்கள், துணைக்கோள்கள், நட்சத்திரங்கள், விண்வெளி, விண்வெளிப்பயணங்கள் போன்ற புதினங்களும் ஊடகங்களால் தரப்படுகின்றன. வியாபார நோக்கம், இலாப எண்ணம் இருப்பினும், மக்களை விழிப்பூட்ட அவை தவறுவதில்லை. நன்மை செய்ய பின்னிற்பதில்லை. உண்மைகளை வெளிக்கொணர தயங்குவதில்லை. நேர்மையாய் உழைக்கும் ஊடகங்கள், சார்புநிலை கொண்டிருப்பதில்லை. அரசு, மக்கள், ஆயுதம், மிரட்டல், எதற்கும் பணியாது உண்மையை ஏற்று, தர்மத்தின் வழி நின்று, வெற்றிநடை போடுவனவே நடுநிலையான ஊடகங்கள். இந்த வரிசையில் தொலைக்காட்சி, வானொலி, பத்திரிகைகள், சஞ்சிகைகள், இணையதளம் என்பன முன்னணி வகிக்கின்றன. தொடர்பாடல் ஊடகங்கள் மூலம் செய்திகள் விரைந்து பரந்து மக்களை அடையும் காலம் என்று கூறி நிறைவு செய்கின்றேன்.

நன்றி, வணக்கம்.

ஆக்கம்: ஆசிரியர் திருமதி. செல்வராஜி இரங்கநாதன்.